# கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 25.07.2023 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுன் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
   **அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
   **பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.547**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது( க.எண்.1464/2016/சி1)
   **அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
   **பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.548**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஜுன் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
   **அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
   **பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.549**

4. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஜுன் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
   **அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
   **பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.550**

5. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14262/2022/TP–2 நாள்.20.06.2023 இல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சியால் அங்கீகரிக்கப்படும் மனைப்பிரிவுகளில் மனைப்பிரிவுதாரர்களால் நகராட்சிக்கு ஒப்படைக்கப்படும் பூங்கா, விளையாட்டு திடல்கள் மற்றும் OSR Land ஆகியவற்றினை நகராட்சி ஆணையர் பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டு நகரளவை ஆவணங்களில் மாற்றம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

   எனவே, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின்அறிவுரையின் படி இந்நகராட்சியில் மனைப்பிரிவுதாரர்களால் 79 மனைப்பிரிவுகள் அங்கீகரிக்கப்பட்டு அதில் பூங்கா விளையாட்டு திடல்கள் மற்றும் OSR Land ஆகிய பொது ஒதுக்கீடுகளை 35 மனைப்பிரிவுகளில் ஆணையர் பெயருக்கு உட்பிரிவு செய்யப்பட்டு நகரளவை ஆவணங்களில் ஆணையர் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 44 மனைப்பிரிவுகளில் உள்ள மேற்காணும் விபரப்படியான பொது ஒதுக்கீடுகளை ஆணையர் பெயரில் உட்பிரிவு செய்து நகரளவை ஆவணங்களில் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். தற்போது மேற்படி 44 மனைப்பிரிவுகளில் உள்ள பொது ஒதுக்கீடுகளை ஆணையர் பெயரில் இணைய வழியாக பதிவு செய்து உட்பிரிவு செய்வதற்கும் மற்றும் ஆவணங்களை நகல் எடுக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.75,000 ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.1472/2023/எப்1)

   **அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

   **அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.551**

6. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31040/2022/TP2 நாள்.11.01.2023 இல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையங்களில் நீதிமன்ற வழக்குகள் குறித்த விபரங்களை கணினியில் பதிவேற்றம் செய்யவும், பதிவிறக்கம் செய்யவும், மேலும் மேற்படி வழக்குகள் குறித்த விபரங்களை வழக்கறிஞர்கள், வழக்கு தொடுத்தவர்கள் மற்றும் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் E-Seva Kendra அமைக்க 10 x 15 அளவில் உள்ள கடையினை ஒதுக்கீடு செய்யுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

   மேற்காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் எதிரில் அமைந்துள்ள MUDF வளாக இரண்டாம் தளத்தில் கடை எண்.21, 20 x 10 அளவிலான கடை காலியாக உள்ளதால் E-Seva Kendra அமைக்க ஒதுக்கீடு செய்யலாம். இதற்கான மாத வாடகை ரூ.7250/- நிர்ணயம் செய்து உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.165/2023/எப்1)

   **அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

   **அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.552**

7. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம், ஈரோடு அவர்களின் கேட்பு நோட்டீசு PRCNO : CBSL0099/90013/507/2023/98 நாள் 09.05.2023 ல் EPFO நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ. 6,41,325/- ல் செலுத்துமாறு தெரிவித்து கடிதம் வரப் பெற்றுள்ளது. எனவே இன் நகராட்சியிலிருந்து EPFO ஈரோடு அவர்களுக்கு செலுத்திய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 3221/2012/எச்1)

   **அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

   2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகையினை செலுத்தியதற்கு மன்றம் ஏற்கலாம்

   **அலுவலக குறிப்பு 1) அனுமதிக்கப்பட்டது. 2.ஏற்றுக்கொள்ளப்பட்டது**

   **மன்றத்தீர்மானம் எண்.553**

8. நகராட்சி பகுதிகளில் அமைக்கப்படும் நிரந்திர விளம்பரங்கள் , விளம்பர பேனர்கள் மற்றும் தட்டிகள் ஆகியவற்றிக்கு முறையாக அனுமதி பெற்று அமைக்க 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் படியும் அதன்பின் உருவாக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின் படியும் அனுமதி வழங்கவும், அனுமதி இல்லாமல் விதிமீறல்கள் உள்ள விளம்பர கட்டுமானங்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் அரசு ஆணை எண்.45 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.12.04.2023 இல் கீழ்கண்டவாறு விதிமுறைகள் நிறுவப்பட்டுள்ளது.
   1. நிரந்திர விளம்பர கட்டுமானங்கள் நிறுவுவதற்கு முறையாக ஆணையாளருக்கு அதற்கான விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.
   2. விளம்பரத்தின் அளவுகள் விளம்பர கமிட்டி குழுவால் அங்கீகரிக்கப்படும் அளவுகளில் தான் அமைக்கப்பட வேண்டும்.
   3. தனியாருக்கு சொந்தமான கட்டிடம் / நிலத்தில் விளம்பர பதாகை அமைக்க நிலத்தின் உரிமையாளர்/ கட்டிட உரிமையாளரின் தடையின்மைச்சான்று பெறப்பட வேண்டும்.
   4. அரசு நிலம், அரசுக்கு சொந்தமான கட்டிடங்கள், மாநிலம்/மத்திய அரசு கட்டிடமாக இருந்தால் அந்த துறையின் தடையின்மைச்சான்று பெறப்பட வேண்டும்.
   5. விளம்பர கட்டுமானம் அமைப்பதற்கு முன் விளம்பர கட்டுமானம் குறித்து IRTT பொறியாளர் அல்லது Structural Engineer Grade- I பதிவு பெற்ற பொறியாளரின் சான்று பெறப்பட வேண்டும்.

6. சுற்றுச்சார்பு வரைபடம், விளம்பர அமைப்பு வரைபடம். மனையிட வரைபடம் (Topo Sketch, Advertisement Plan, Site Plan) பதிவுபெற்ற வரைபட வரைவாளரின் ஒப்புதலுடன் சமர்பிக்கப்பட வேண்டும்.
7. விளம்பர நிறுவனம், விளம்பர அமைப்பு நிறுவனம் மற்றும் மனுதாரரின் PAN Card மற்றும் Goods and Service Tax Cetificate இணைக்கப்பட வேண்டும்.
8. ஒளிரும் தன்மை (Lighting ) கொண்ட விளம்பரம் அமைத்தால் பதிவு பெற்ற Electrical Engineer சான்று பெறப்பட வேண்டும்.
9. போக்குவரத்து காவல் ஆய்வாளர், நகர காவல் ஆய்வாளர் தெரிவிக்கப்படும் இடங்களில் அவர்கள் குறிப்பிடப்படும் அளவுகளுக்கு உட்பட்டு அவர்களது பரிந்துரை கடிதத்துடன் விண்ணபிக்கப்பட வேண்டும்.
10. விண்ணப்பம், விளம்பரங்கள் அமைக்கப்படுவதற்கு முன்பு சுமார் 30 தினங்களுக்கு முன் விண்ணபிக்க வேண்டும்.
11. விளம்பரங்கள் அமைக்கும் போதும் அமைத்ததற்கு பின்னும் நிகழும் சகல நிகழ்வுகளுக்கும் விளம்பர அமைப்பாளர், விளம்பர நிறுவனம், மனுதாரர், விளம்பரம் நிறுவப்படும் நில உரிமையாளர்/ கட்டிட உரிமையாளர் ஆகியோரே முழுப்பொறுப்பு என ரூ.20/– மதிப்பிலான அரசு முத்திரைத்தாளில் உறுதிமொழி வழங்கப்பட்டு நோட்டரி வழக்கறிஞரின் கையொப்பம் பெற்று சமர்பிக்கப்பட வேண்டும்.
12. விளம்பரங்கள் உடன் அகற்றப்பட வேண்டும் என நகராட்சியால் தெரிவிக்கும் பட்சத்தில் எவ்வித இடையூறும் செய்யாமல் சம்மந்தப்பட்ட நிறுவனங்கள். விளம்பரதாரர்கள், கட்டிட உரிமையாளர்கள் தாங்களாகவே முன்வந்து அகற்றிக்கொள்ள வேண்டும்.
13. அரசால் தெரிவிக்கப்படும் விதிமுறைகளுக்கு உட்பட்டு விளம்பரங்கள் அமைக்கப்பட்டு முறையாக அவ்வப்போது விளம்பர கட்டுமானத்தின் (Stability) உறுதித்தன்மையை சரி பார்க்கப்பட வேண்டும்.
14. நகராட்சியாளல் வழங்கப்படும் விளம்பர உரிமத்தை மற்றவர்களுக்கு மாற்றக்கூடாது. எந்த விளம்பரத்திற்கு அனுமதி கொடுக்கப்படுகிறதோ அந்த விளம்பரம் தான் அமைக்கப்பட வேண்டும். அதை மாற்றி வேறு விளம்பரங்கள் அமைத்தால் விளம்பரம் அகற்றப்படும். மீண்டும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.
15. விளம்பரத்தின் உரிம காலம் மற்றும் உரிமம் எண்ணை விளம்பரத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.மேலும், விளம்பரத்தின் அளவுகளும் குறிப்பிடப்பட வேண்டும்.
16. விளம்பர உரிமம் மூண்றாண்டிற்கு அனுமதிக்கப்படும். ஆதலால் ஒவ்வொரு ஆண்டும் விளம்பர அமைப்பின் (Stability) உறுதிதன்மையும் மற்றும் விளம்பரம் அமைக்கப்படும் கட்டிடத்தின் உறுதிதன்மையையும் சரிபார்க்கப்பட வேண்டும்.அதில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு கட்டிட உரிமையாளர், நிறுவன உரிமையாளர், விளம்பர உரிமையாளரே முழுப்பொறுப்பாவார்கள்.
17. விளம்பரங்கள் தேசிய பூங்கா, மாவட்ட வனங்கள் நீர்நிலைகள், பிரதான கட்டிடம், சின்னங்கள், சுடுகாடு, இடுகாடு, பழமை வாய்ந்த கட்டிடங்கள், சுற்றுப்புறச்சூழல், கோவில், மசூதி, சர்ச் கட்டிடங்கள் ஆகிய பகுதிகளில் விளம்பரங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.
18. விளம்பரங்கள் உரிமக்காலம் முடிவற்கு இரண்டு மாதத்திற்கு முன்பாகவே விளம்பரம் தேவைப்படுமானால் முறையாக விண்ணப்பிக்கப்பட்டு உரிமம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
19. நிரந்திர விளம்பரங்கள் அமைக்க விண்ணப்பக்கட்டணம் ரூ.1000/– செலுத்தப்பட வேண்டும்.

20. நிரந்திர விளம்பரங்கள், LCD, LED லைட்டுகளுடன் அமைக்க பேருந்து நிலையம் , பேருந்து நிறுத்தம், பூங்கா, விளையாளட்டு மைதானம், ரயில் நிலையம், பாலங்கள், மேம்பாலங்கள், பொதுக்கழிப்பிடங்கள், குப்பை கிடங்கு மற்றும் குப்பை பிரிக்கும் பகுதிகளில் அமைக்க ஒரு சதுர மீட்டருக்கு ரூ.3000/– வீதம் உரிமக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
21. வாகனங்களில் செய்யப்படும் Digital விளம்பர போர்டுகளுக்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.1000/– உரிமக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
22. விளம்பரங்கள் அமைக்கப்படும் போது அந்த விளம்பரதாரரோ , விளம்பரம் அமைக்கும் உரிமையாளரோ அல்லது கட்டுமான/நில உரிமையாளரோ விளம்பர கட்டுமானத்திற்கு தனி நபர் (Third Party) காப்பீடு, Insurance எடுக்க வேண்டும். விளம்பர அமைப்பின் மீது Insurance Policy Number எழுதப்பட வேண்டும்.
23. நகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் விளம்பரம் அமைக்கும் போது அரசு சந்தை மதிப்பீட்டில் 14% நில வாடகை செலுத்தப்பட வேண்டும்.
24. விளம்பரம், பேனர்கள், மற்றும் தட்டிகள் அமைக்கும் பொழுது பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் எவ்வித இடையூறுகளும் ஏற்படாத வகையில் அமைக்கப்பட வேண்டும்.
25. விளம்பர அமைப்புகள் அமைக்கப்பட்ட பின் பொதுமக்களிடமிருந்தோ, பிற அமைப்புகளிடமிருந்தோ புகார் வராத வகையில் அமைக்கப்பட வேண்டும். அதனையும் மீறி விளம்பர அமைப்பு இருக்கும் பட்சத்தில் புகாரின் தன்மைக்கேற்ப அதன் உண்மைத்தன்மை அடிப்படையில் நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்படி விளம்பர அமைப்புகள் அமைப்பது குறித்தான மேற்காணும் விதிமுறைகளை குறிப்பிட்டுள்ள அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும், மேற்படி விளம்பரம் அமைப்பது குறித்து பொதுமக்களுக்கு தெரியும் வகையில் விதிமுறைகளை தினகரன் நாளிதழில் 27.06.2023 இல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான செலவுத்தொகை ரூ.7711/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1207/2023/எப்1)

**அலுவலக குறிப்பு** :– 1. பதிவு செய்யலாம்.

2. நாளிதழில் விளம்பரம் செய்ததற்கான விளம்பரக்கட்டணம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. பதிவு செய்யப்பட்டது. 2. அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.554**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி அங்காடிக்கு எதிர்புறம் அமைந்துள்ள பாலடைந்த கறிக்கடை மற்றும் பாலடைந்த நிலையில் உள்ள பால வித்யாலயா பள்ளி ஆகிய இரண்டு கட்டிடங்களை தரைமட்டம் வரை இடித்து அப்புறப்படுத்தி எடுத்துக்கொள்ளும் பணிக்கு10.07.2023 திங்கட்கிழமை காலை 3 00.மணிக்கு நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மூன்று நபர்கள் வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர்.

1. ரபி ஸ்டில்ஸ்
2. SP டிரேடர்ஸ்
3. DUNLOP அயன் டிரேடர்ஸ்

மேற்கண்டவாறு ஏலத்தில் கலந்து கொண்ட மூன்று நபர்களின் ரபி ஸ்டில்ஸ் அவர்கள் உயர்ந்த பட்ச ஏலத்தொகையாக ரூ,16,000 /– கோரியுள்ளார் .

ரபி ஸ்டில்ஸ் அவர்களின் உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்று மேற்கண்ட கட்டிடத்தை இடித்து அகற்றும் பணிக்கு பணி உத்திரவு வழங்கலாம் .

**அலுவலகக்குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கட்டிடத்தை இடித்து அகற்றும் பணிக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிகலாம்

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.555**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சியானது அரசாணை எண்.238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல் ) துறை நாள். 02.12.2008 ன் படி முதல் நிலை நகராட்சியிலிருந்து தேர்வு நிலை நகராட்சியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் பொறியாளருக்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனம் TN 36 F 7005 என்ற வாகனம் வாங்கப்பட்டு 19 வருடங்கள் முடிவுற்றதால் தற்பொழுது மத்திய அரசின் மோட்டார் வகன சட்டப்படி பதிவு செய்யப்பட்டு 15 வருடங்களுக்கு மேல் உள்ள வாகனங்களை புதுப்பித்து மீண்டும் இயக்க இயலாத நிலை உள்ளது.

கோபிசெட்டிபாளையம் நகராட்சி 7.51 ச.கி.மீ 30 வார்டுகளை உள்ளடக்கியுள்ளது . தற்பொழுது நகராட்சி பகுதியில் புதிதாக ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் (IUDM ) கீழ் பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்று வருவாதாலும் மற்றும் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தில் (TURIP ) பணிகள் நடைபெற்று வருகிறது. நகராட்சி நீரேற்று நிலையம் நகராட்சி எல்லையிலிருந்து 10 கி.மீ தொலைவில் உள்ளதால் தினசரி ஆய்வுக்காக நீரேற்று நிலையம் சென்று வரவும் , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்டங்களுக்கு திருப்பூர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வுக்கூட்டம் ஈரோடு செல்ல வேண்டியுள்ளது.எனவே பழைய வாகனத்தின் உரிமத்தை புதுப்பித்து இயக்க இயலாத காரணத்தால் புதிதாக DGS & D விலை விகிதத்தில் மகேந்திரா பொலிரோ வாகனம் ரூ.10.00 இலட்சத்தில் வாங்க மன்ற அனுமதி வேண்டப்படகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம் .
2. செலவின தொகையை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவிடலாம் .

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.556**

11. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் 21.04.2023 ஆம் தேதியிட்ட கடிதத்தில் நகராட்சி பகுதியில் எனது குப்பை எனது பொறுப்பு, மக்கும்/மக்காத குப்பை பிரித்து கொடுப்பது, பிளாஸ்டிக் ஒழிப்பு, வீட்டுக்கொரு கழிவறை, டெங்கு காய்ச்சல் பரவல் தடுக்கும் விதம், குறித்து பொதுமக்களுக்கு கலைநிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தி பணிகள் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

எனவே நாடக குழுவினர் மூலம் நகராட்சி பகுதியில் மக்கள் கூடும் இடங்களில் நான்கு இடங்களில் கலை நிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ. 40000/– ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.534/2023/எச்1)

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.557**

12. இந்நகராட்சியின் மூலம் தினமும் சேகரமாகும் மக்கும் கழிவுகளிலிருந்து தயார் செய்யப்படும் இயற்கை உரத்தினை "செழிப்பு" என்ற பெயரில் தயார் செய்து "செழிப்பு" என்கின்ற பெயரில் விற்பனை செய்ய இந்நகராட்சிக்கு உதவி இயக்குநர் வேளாண்மைத்துறை அலுவலகம், திண்டல் ஈரோடு அவர்களின் கடித ந.க.எண் 0534/2023/எச்1 நாள் 21.06.2023 ன் படி உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உரத்தை "செழிப்பு" என்ற பெயரில் விற்பனை செய்ய சுமார் 5 கிலோ கொள்ளளவு கொண்ட துணிப்பை முதற்கட்டமாக 500 பைகள் தேவைப்படுவதால் , "செழிப்பு" என்கின்ற பெயரில் 5 கிலோ கொள்ளளவு கொண்ட உரத்தினை விற்பனை செய்ய தேவையான துணிப்பை கொள்முதல் செய்து கொள்ளவும். அதற்கான தோராய செலவினம் ரூ. 25,000/- செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.534/2023/எச்1)

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.558**

13. நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023 ன் படி, புதியதாக கட்டப்பட்டு வரும் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்ட (KNMT SHOPS) கடை எண்.10 மற்றும் 11 ஆகிய இரண்டு கடைகளுக்கு 23.06.2023 ம் தேதியன்று நான்காவது முறையாக முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் நடைபெற்றது.

மேற்படி மூன்று கடைகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. கடை எண். 10 க்கு மட்டும் இரண்டு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | கடையின் விபரம் | ஏலத்தில் கலந்து கொண்டவர் விபரம் | ஏலத் தொகை |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய KNMT கடை எண். 10 | திரு.பி.திருஞானசம்பந்தம்<br>த/பெ. பழனிசாமி,<br>1/5, செங்கோட்டையன் காலனி,<br>பெரிய மொடச்சூர், கோபி<br>99432 80622 | **ரூ.10,300/-** |
| | | திரு.எஸ்.சதீஸ்குமார்<br>த/பெ. செல்வராஜ்,<br>7சி. குப்பன் வீதி,<br>பெரிய மொடச்சூர், கோபி<br>96295 83448 | ரூ.10,100/- |

மேற்கண்ட விபரங்களின்படி **பேருந்து நிலைய KNMT கடை எண்.10** க்கு திரு.பி.திருஞானசம்பந்தம் என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.10,300/- ஐ ஏற்றுக் கொண்டு மேற்படி **பேருந்து நிலைய KNMT கடை எண்.10** க்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், ஏலம் போகாத கடை எண். 11- க்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.773/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.559**

14. நகராட்சிக்கு சொந்தமான IUDP வாரச்சந்தை கடை எண். 30 ( வரி விதிப்பு எண் 057/559) திருமதி.சுப்புலட்சுமி என்பவருக்கு 01.04.2020 முதல் 31.03.2023 வரை குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நபர் தனது 29.03.2023 ந் தேதிய மனுவில் தனது வயது முதிர்வின் காரணமாக தன்னால் மேற்படி கடையினை தொடர்ந்து நடத்த இயலாது எனவும், எனவே 01.04.2023 ம் தேதியன்று மேற்படி கடையினை நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்வதாகவும் தெரிவித்துள்ளார். வருவாய் ஆய்வர் தனது 14.07.2023 ம் தேதிய குறிப்பில் மேற்படி கடையினை 01.04.2023 முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனவும், மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் தெரிவித்துள்ளார். எனவே IUDP வாரச்சந்தை கடை எண். 30 க்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண். 3060/2016/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அனுமதி வழங்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.560**

15. இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் கழிவுகளை அறிவியல் முறைப்படி MCC மற்றும் RRC போன்ற பகுதிகளில் உரமாக்கப்பட்டும் மற்றும் Bio – Gas தயாரிக்கப்பட்டும் வருகிறது. இப்பகுதிகளில் ஈ – க்கள் அதிக அளவில் இருப்பதால் அவற்றை கட்டுப்படுத்திட ஈ தடுப்பு மருந்து தேவைப்படுவதால் 15 லிட்டர் ஈ தடுப்பு மருந்து கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 15,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1707/2023/எச்1)

**அலுவலகக் குறிப்பு** :
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.561**

16. இந்நகராட்சியில் 30 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை நல்ல முறையில் மேற்கொள்ள முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்திட pyrethrum 2% Extract 100 லிட்டர் மற்றும் கொசு புழுக்களை கட்டுப்படுத்த அபேட் Temiphos Emulsifiable 50% EC– 50 லிட்டர் மருந்தும், கழிவு நீர் கால்வாயில் உருவாகும் கொசு புழு உற்பத்தியை தடுக்கும் மருந்து BT Liquid 100 Lit. பள்ளி குழந்தைகளுக்கு டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட பாதிப்பு பகுதிகளில் நில வேம்பு பவுடர் குடிநீர் வழங்கும் பொருட்டு 50 கிலோ கொள்முதல் செய்து நோய்தடுப்பு பணிகளை மேற்கொள்ள அதற்காகும் தோராய செலவு ரூ. 3.75 லட்சம் க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1708/2023/எச்1)

**அலுவலக குறிப்பு** :
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.562**

17. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மை பணிகளுக்கும், சமுதாய கழிப்பறைகள் சுத்தம் செய்யும் பணிக்கும் 2023 – 2024 ஆம் ஆண்டுக்கு தேவையான கிருமிநாசினிகள் விவரம் கீழ்காண்டவாறு.

**கிருமிநாசினிகள் விபரம்**

| வ. எண். | விவரம் | தேவையான அளவு |
|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்பு | 8 டன் |
| 2 | பிளீச்சிங் பவுடர் | 2 டன் |
| 3 | கருப்பு பினாயில் | 100 லிட்டர் |
| 4 | ஆசிட் கழிப்பறைகளுக்கு பயன்படுத்த | 30 லிட்டர் |

மேற்கண்ட விவரப்படி தேவையான கிருமிநாசினிகள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,60,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1709/2023/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.563**

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல் நோய் பரவும் விதம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு தினமும் 37 பணியாளர்களை (DBC Workers) வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் M/s S.S. Engineerrs, 3/6, Kamadenu Nagar,Vadavalli, Coimbatore – 641041 அவர்களிடம் பெற்று நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி பணியின் ஒப்பந்த காலம் 02.08.2023 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/s. S.S. Engineerrs, 3/6, Kamathenu Nagar, Vadavalli, Coimbatore – 41 அவர்களின் 14.07.2023 ஆம் நாளிட்ட கடிதத்தில் 02.08.2023 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.570/– என்னும் விலைவிகிதத்திலேயே தொடர்ந்து 03.08.2023 முதல் 02.09.2023 ஆம் தேதி வரை ஒரு மாத காலத்திற்கு பணியாளர்களை வழங்க சம்மதம் தெரிவித்து ஒப்பந்தகாலத்தினை கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட கொசு புழு ஒழிப்பு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 03.08.2023 முதல் 02.09.2023 ஆம் தேதி வரை ஒரு மாத காலத்திற்கு நிர்வாக நலன் கருதி காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.570/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 37 DBC பணியாளர்களை பெற்று தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.6.32/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.0371/2023/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.564**

19. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண் 98 நாள் : 13.07.2023 இல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்களுக்கு கீழ்காணும் விவரப்படி மாதந்தோறும் மதிப்பு ஊதியம் வழங்க மேற்காணும் அரசாணையின் படி உத்திரவிடப்பட்டுள்ளது.

**அதன் விபரம்**

1. நகர்மன்ற தலைவர் – ரூ.15,000/–
2. நகர்மன்ற துணைத் தலைவர் – ரூ. 10,000/–
3. நகர்மன்ற உறுப்பினர் – ரூ. 5,000/–

மேற்காணும் விவரப்படி ஜூலை 2023 ஆம் மாதம் முதல் மதிப்பு ஊதியம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1705/2023/சி1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.565**

20. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணியினை செய்வதற்கு 05.07.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் குழாய்களில் ஏற்படும் பழுதுகள் , மின் மோட்டார் ரிவைண்டிங் ,செய்தல், பம்ப் உதிரி பாகங்கள் பொருத்துததல் , ஸ்டாட்டர்சில் ஏற்படும் பழுதுகள் மின் உபகரணங்கள் பொருத்துதல் , புதிய கேபில் பொருத்துதல் ஆகிய பணிகள் அவ்வப்பொழுது சரி செய்து இயக்கப்பட வேண்டியுள்ளது. இப்பணிகள் 2023 – 2024 ஆம் ஆண்டுக்கு பராமரிப்பு பணிகள் செய்தல் | **9,50,000** | **M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர்** | 0.24 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.65 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–**

1. .மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியில் வ.எண்.1 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது**

**M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசிஸ் – ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மன்றத்தீர்மானம் எண்.566**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.10 சாய் அபிராமி நகர் பகுதியில் அடர்வனக்காடுகள் உள்ளன. அதிலுள்ள மரங்களை பாதுகாக்கும் பொருட்டு அவ்விடத்தில் தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் மேற்கண்ட இடத்தில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்ய மதிப்பீட்டு தொகை ரூ.3,60,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்கண்ட செலவின தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம் .

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.567**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள குடிநீர் தொட்டி பேருந்து நிலைய பயன்பாட்டிற்கு இடையூராக உள்ளதால் மேற்கண்ட குடிநீர் தொட்டியினை இடித்து அப்புறப்படுத்த ஆகும் செலவினம் ரூ.45,000./–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்கண்ட செலவின தொகையை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம் ,

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.568**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் உள்ள நீராவி கொதிகலன் , இட்லி பெட்டி , நீராவி குழாய் , அரிசி கழுவும் இயந்திரம், கிரைண்டர் கல் , கிரைண்டர் பிளேடு மற்றும் மிக்ஸி ஆகியவை பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட உபகரணங்களை பழுது நீக்கவும் மற்றும் பயன்படாத நிலையில் உள்ள இயந்திரங்களுக்கு பதிலாக புதிய இயந்திரங்களை வாங்கவும் ரூ.2,10,000 /– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம் .

1. மேற்காண் செலவின தொகையை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம் ,
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**அலுவலக குறிப்பு 1,2, மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.569**

24. இந்நகராட்சியில் **Dormant Accounts and Interest Fund 2023-2024** இல் கீழ்கண்டுள்ள பணியினை செய்வதற்கு 12.07.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1567 /2023 /இ1)

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம்** | **கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்** |
|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் அப்துல்கலாம் நகர் 1வது வீதி 057003R0106, அப்துல்கலாம் நகர் 2 வது வீதி | **M/s.S.P.D. இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் ஒப்பந்ததாரர்** | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே |

| | | | |
|---|---|---|---|
| | ஆகிய இடங்களில் தார்சாலைகள் அமைத்தல் | M/s. A K N.கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் | 3.32 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1.மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.S.P.D. இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

2.திட்டபனியாக உள்ளதால் நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிஉத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1) M /s S.P.D. இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் –ன் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2) அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.570**

26. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் அனைத்து பகுதிகளுக்கும் IUDM திட்டத்தின் கீழ் சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு 135 கி.மீட்டருக்கு பகிர்மான குழாய் பதித்து மற்றும் 17.99 கி.மீட்டருக்கு நீரேற்று குழாய் பதிக்கப்பட்டு நகராட்சி பகுதியில் உள்ள 10 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மூலம் குடிநீர் விநியோக செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. 30 வார்டுகளில் பகிர்மான குழாய் மூலம் குடிநீர் சீராக அனைத்து பகுதிகளுக்கும் தடையின்றி வழங்க 94 வால்வுகள் புதிதாக பொருத்தப்பட்டு அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் தினசரி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகிறது. தற்போழுது நகராட்சியில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள குழாய் திருப்புநர் நிரந்தர பணியாளர் ஒருவர் மட்டுமே உள்ளதால் குடிநீர் விநியோகம் செய்யும் பணியினை தடையின்றி மேற்கொள்ள 30 வார்டுகளுக்கு குறைந்தது 15 பணியாளர்கள் தேவைப்படுகிறது. எனவே மேற்கண்ட பணிக்கு ஆண்கள் சுய உதவிக்குழுவின் மூலம் பணியாளர்களை நியமித்து குடிநீர் விநியோகம் செய்ய மூன்று மாதங்களுக்கு உத்தேச மதிப்பீட்டு தொகை . ரூ.9,30,000 /– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம் ,

2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவிடலாம்

**அலுவலக குறிப்பு 1,2, மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது . மன்றத்தீர்மானம் எண்.571**

(ஒப்பம்)– என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி